செ.வெ.எண்:03 நாள்:03.04.2017

# அரியலூரில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.04.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **"மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (03.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **1040** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியிலிருந்து அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், தூத்தூர் கிராமத்தைச் சேர்ந்த **திருமதி.ஜான்சிராணி, க/பெ.கிருஷ்ணமூர்த்தி** என்பவருக்கு 2016-17ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியின் கீழ் கறவை மாடு வளர்ப்பு தொழிலுக்கு தாட்கோ மூலம் **ரூ.20,000/-**க்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

மேலும், வருவாய்த்துறையின் சார்பில் அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், உஞ்சினி வடக்கு தெருவில் வசித்து வரும் **நடேசன் மகன் இராமசாமி** வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது.

மாவட்ட ஆதிதிராவிடர் நல துறையின் மூலம் 2015-16ஆம் கல்வியாண்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் வலராற்று பாடத்தில் 200/200 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடம் பெற்ற ஆண்டிமடம் வட்டம், வரதஜான்பேட்டை அலங்காரன்அன்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த **செல்வி.வனிதா** என்ற மாணவிக்கு பாராட்டு சான்றிதழும், காசோலையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல துறையின் மூலம் 2015-16ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் வரதராஜன்பேட்டை தொன்போஸ்கோ மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த **செல்வன்.சிவசங்கர்** என்ற மாணவனுக்கு மாநில அளவில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் தங்கி பயின்று முதலிடம் பெற்றதைத் தொடர்ந்து **ரூ.10,000/-**க்கான காசோலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தனசேகரன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) திரு.பாலாஜி, துணை ஆட்சியர் (நிலம்) திரு.சீனிவாசன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.ஹேமலதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரூபன்தாஸ் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.